Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 5, 2023

திங்கட்கிழமை ஜூன் 05, 2023 | ஒளி: 09 கதிர் 011 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

## சிலிண்டர் விலையை குறைத்தது லிட்ரோ

12.5 கிலோகிராம் நிறையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், ஞாயிற்றுக்கிழமை (04) காலை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



யாழ். பல்கலைக்கழகத்தில்

## 31 மாணவர்களுக்கு உள்நுழைவுத் தடை




நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடங்களில் மாணவர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பில் 31 மாணவர்களுக்கு உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# பரீட்சை முறைகேடுகளுக்கு பர்தா காரணமல்ல

## மாணவிகளை அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும் என்கிறார் இம்ரான் எம்.பி



ஹஸ்பர்

க.பொத. சா/த பரீட்சைக்கு தோற்றும் முஸ்லிம் மாணவிகள் பர்தா தொடர்பிலான விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க தயாராக இருக்கிறார்கள் என்றும் பரீட்சை மண்டப அதிகாரிகள் மாணவிகளின் மனநிலையை புரிந்துகொண்டு அவர்களை முறையாக தெளிவுபடுத்த வேண்டும் என்றும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உதவிச் செயலாளருமான இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவிகளுக்கு பரீட்சை மண்டபத்தில் பர்தா அணிய மறுப்பு தெரிவிக்கப்படுகின்றமை குறித்து மாணவிகள் பலரும் எம்பியிடம் முறைப்பாடுகள் கையளித்துள்ள நிலையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## கோட்டாபயவை குடிபெயர்த்த சத்தம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பௌத்தாலோக மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ அரச பங்களாவுக்கு குடிபெயர்ந்துள்ளார்.

தனது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ ஆக்கிரமித்திருந்த பங்களாவை கோட்டாபயவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

நீதியான ஆட்சி அமைய வேண்மெனின்

## மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் விசாரிக்கப்பட வேண்டும்



இலங்கைத் தீவிலே ஒரு நீதியான ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால் பல்வேறு பட்ட ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் விசாரிக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற

தொடர்ச்சி P2


பயங்கரவாதத்துக்கு நிதியுதவி

## தடுப்பதற்கான செயற்பாடுகளை இலங்கை விரைவில் ஆரம்பிக்கும்



சட்டவிரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவிகளை வழங்குவதை தடுப்பதற்காக காணப்படும் சட்டதிட்டங்களின் இடைவெளிகளை விரைவில் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதற்கான அடுத்தகட்ட செயற்பாடுகளை இலங்கை விரைவில் ஆரம்பிக்கும் என்று உறுதியளித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## மன்னரையும் ராணியையும் சந்தித்தார் பிரதமர் தினேஷ்

தாய்லாந்து மன்னர் மஹா வஜிரலோங்கோர்ன் மற்றும் ராணி ஆகியோரை பாங்கொக்கில் உள்ள அரச மாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தன சந்தித்துள்ளார்.

30 வருடங்களுக்கு முன்னர் தான் பட்டத்து இளவரசராக இருந்த போது கண்டியில் உள்ள தலதா மாளிகைக்கு சென்றதன் இனிய நினைவுகள் இன்னும் தனது இதயத்தில் உள்ளதாகவும் இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பௌத்த உறவுகளைப் பற்றி மன்னர் சுட்டிக்காட்டியதாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

கஜேந்திரகுமார் விவகாரம்

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் டிரான் பணிப்பு



யாழ்ப்பாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரை

## நியமித்தால் மன்றங்கள் அரசியல் மயமாகும்




பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர், அரசியல் கட்சியொன்றின் பிரதிநிதியாக இருப்பதால் அவரது பிரதிநிதியை நியமிப்பது உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல் மயமாகுவதற்கு வழிவகுக்கும் என்றும் உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் பிரதிநிதியை நியமிக்கும் தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என்றும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



இலங்கை - மாலைதீவு கூட்டு

## அமர்வு ஜூன் 6 ஆரம்பமாகிறது

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழுவின் நான்காவது அமர்வு ஜூன் 06 முதல் 07 வரை கொழும்பில் உள்ள இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2

கல்முனை விவகாரம் குறித்து

## ஹரீஸும் காரியப்பரும் தீர்வுகாண வேண்டும்

### முரண்பாடு ஆரோக்கியமானதல்ல என்கிறார் யஹியாகான்



ஏ.எம்.அஸ்லம்

பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் ஆகியோர் கல்முனை விவகாரத்தில் முரண்பாடான கருத்துக்களை கூறி வருவதானது கட்சிக்கும் சமுகத்துக்கும் ஆரோக்கியமான விடயமல்ல என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பதில் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சேதம் விளைவித்த 23 பேர் கைதாகினர்

கொழும்பு, நவம் மாவத்தையில் உள்ள கிரீன் லங்கா கட்டடத்துக்குள் ஞாயிற்றுக்கிழமை (04) அதிகாலை நுழைந்து பல மாடிகளில் உள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தனர் குற்றச்சாட்டில் குறைந்தது 23 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



சுற்றுலாப் பயணிகளால்

## மேயில் 131.5 மில். டொலர் இலங்கைக்கு வருமானம்

மே மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் இலங்கை 131.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், மே மாதத்தில் இலங்கையின் மதிப்பிடப்பட்ட சுற்றுலா வருமானம் வருடாந்தம் 200 சதவீதத்துக்கும் அதிகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 31 மாணவர்களுக்கு உள்நுழைவுத் தடை

சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக் கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் "மாகோஸ்" வார நிகழ்வுகள் கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் - கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறி மோதலில் முடிந்தது.

இதனால் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இந்தச் சம்பவம் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகள் ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்றது.

விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் முறையான விசாரணைகள் முடிவுறும் வரை உள்நுழைவுத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக் கழக மாணவர் வதிவிடம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விதிமுறைகளுக்கமைவாக இன்றிலிருந்து மறு அறிவித்தல் வரை உள்நுழைவுத் தடை வதிக்கப்பட்ட மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும், விடுதி உட்பட பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

இதேநேரம், மோதல் சம்பவத்தையாடுத்து முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் "மாகோஸ்" வார நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மஹிந்த ராஜபக்ஷ குடும்பம் விசாரிக்கப்பட வேண்டும்

உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகமான அறிவகத்தில் சனிக்கிழமை (03) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடந்து கருத்து தெரிவித்த அவர், "தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மருதங்கேணிப் பகுதியில், பொதுமக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளமை இந்த நாட்டின் இனஅழிப்பு நடவடிக்கையின் புதிய வடிவத்தையே காட்டிநிற்கின்றது

தமிழர்களை கொன்றொழித்து படுகொலைகளை செய்த ஜேர்.ஆர் ஜெயவர்தனவின் மருமகனான ரணில் அரசின் இந்த செயற்பாடானது இந்த நாட்டிலே அதியுச்ச அடக்குமுறையையே காட்டிநிற்கிறது.

இந்த நாட்டிலேயே 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் இலங்கை வருமானவரி திணைக்களத்திலே பதிவு செய்து தங்களுடைய உழைப்பு வருமானங்களுக்கு வருடாந்தம் வரி செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது.

## மேயில் 131.5 மில். டொலர்...

மே மாதம் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு இடையூறான மாதமாகக் கருதப்பட்ட போதிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

ஏப்ரல் மாதத்தில் சுற்றுலாத்துறையின் வருமானம் 167 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மே மாதத்தில் 83,309 சுற்றுலாப் பயணிகளை இலங்கை வரவேற்றுள்ள நிலையில், இந்த ஆண்டு ஒரு மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 1 இலட்சத்துக்கும் கீழ் குறைந்துள்ளது இதுவே முதல் முறையாகும்.

இருப்பினும், மே 2022 இல் பதிவுசெய்யப்பட்ட வருகை புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடுகையில் கடந்த மாதத்தின் எண்ணிக்கை 175.5 சதவீதம் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

2023 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 524,486 வெளிநாட்டு பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தரவுகள் தெரிவிக்கின்றன.

## இலங்கை – மாலைதீவு கூட்டு அமர்வு ஜூன் 6 ஆரம்பமாகிறது

இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எம். யு.எம். அலி சப்ரி, ஜூன் 07ஆந் திகதி மாலைதீவின் வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா ஷாஹித்துடன் கூட்டு ஆணைக்குழுவின் இணைத் தலைவராக இணைந்து செயலாற்றவுள்ளார்.

ஜூன் 06ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டு ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரிகள் மட்டத்திலான கூட்டமானது, அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்துக்கு முன்னதாக நடைபெறும் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை மதிப்பிடவும், புதிய முயற்சிகள் மற்றும் வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு, சுற்றுலா, மீன்பிடி, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, இளைஞர்கள், விளையாட்டு மற்றும் திறன் அபிவிருத்தி, தூதரக மற்றும் கலாச்சார விவகாரங்கள் உள்ளிட்ட பகிரப்பட்ட ஆர்வமுள்ள பன்முகப் பகுதிகளை உள்ளடக்கிய ஒத்துழைப்பை மேலும் முன்னேற்றுவதற்கான வழிகளை மதிப்பீடு செய்யவும் கூட்டு ஆணைக்குழு உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டு ஆணைக்குழுவின் பக்க அம்சமாக, இரு நாடுகளுக்கும் இடையில் பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை முறைகேடுகளுக்கு பர்தா காரணமல்ல

இது தொடர்பில் ஊடகங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (04) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆள் அடையாளத்தை உறுதிபடுத்துவதற்கும் பரீட்சை முறைகேடுகளை தவிர்ப்பதற்கும் பரீட்சை மண்டபத்துக்குள் பர்தா அணிய தடைவிதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பரீட்சை முறைகேடுகளுக்கு பர்தா ஆடை காரணம் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் முறை குறித்து முன் கூட்டியே தேவையான விளக்கங்களை பரீட்சை திணைக்களம் பாடசாலைகளுக்கு வழங்கி இருந்தால் தேவையற்ற பிரச்சினைகளை குறைக்க முடியும்.

திடீரென தாம் வழக்கமாக அணிந்துவரும் பர்தா ஆடையை நீக்கிக்கொள்ளுமாறு பணிக்கும்போது மாணவிகள் மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். இந்நிலையில், அவர்களால் பரீட்சையை திருப்தியாக எழுதமுடியாமையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, மாணவிகளுக்கு உரிய முறையில் பரீட்சை மண்டபத்தில் தெளிவுபடுத்துவதன் ஊடாக அவர்களின் மனஉளைச்சலை தவிர்க்க முடியும்.

சில பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்களும், பரீட்சை தொடர்பான அதிகாரிகளும் முஸ்லிம் விரோதப் போக்கில் செயல்படுவதான குற்றச்சாட்டுக்களும் எம்மிடம் முன் வைக்கப் படுகின்றன. இதுவே தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குகின்றன.

பர்தாவுக்கான தடையை அனுமதிக்க முடியாது. பரீட்சை மண்டபத்தில் ஏற்படும் இந்த பிரச்சினை தொடர்பில் மாற்றுத் தீர்வொன்றுக்கு செல்லவேண்டியிருக்கிறது. எனவே, இது குறித்து முஸ்லிம் புத்திஜீவிகளுடன் அடுத்தவாரம் சந்திப்பொன்றை முன்னெடுக்கவிருக்கிறோம். அதன்பின்னர் இதுவிடயமாக பாராளுமன்றம் ஊடாக சிறந்த தீர்வொன்றை பெற்று மாணவர்களின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

## மன்னரையும் ராணியையும் சந்தித்தார் பிரதமர் தினேஷ்

ஐக்கிய நாடுகளின் வெசாக் தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தாய்லாந்து சென்றுள்ள பிரதமர் தினேஷ் குணவர்தன தாய்லாந்து பிரதமர் மற்றும் பல அரசியல் மற்றும் வர்த்தக தலைவர்களையும் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் டிரான் பணிப்பு

சம்பவம் தொடர்பில் அமைச்சர் அறிக்கையொன்றை கோரியுள்ளதாகவும், சம்பவம் தொடர்பான உண்மைகளை திங்கட்கிழமை நீதிமன்றில் தெரிவிப்பதாகவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் வடமராட்சி கிழக்கில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினருக்கும் புலனாய்வு அதிகாரி உட்பட சிவில் அதிகாரிகளுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

பொலிஸ் பாதுகாப்பு இன்றி பாராளுமன்ற உறுப்பினர் கூட்டத்துக்கு சென்றுள்ளதாகவும் அவரது பாதுகாப்பிற்காக புலனாய்வு அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதன்போது, குறித்த நபர் எம்.பி.யை தாக்க முயற்சிப்பது மற்றும் வன்முறையாக நடந்து கொள்ளும் வீடியோவும் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

அந்த காணொளியின் படி, அந்த பகுதியில் சிவில் அதிகாரி ஒருவரிடம் எம்.பி., அடையாள அட்டையை கோருவது காணப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் அநாகரீகமான வார்த்தைப் பிரயோகம் செய்ததால் அடையாள அட்டையை வழங்க மாட்டேன் என புலனாய்வு அதிகாரி தெரிவித்துள்ளார்.

## சேதம் விளைவித்த 23 பேர் கைதாகினர்

குறித்த கட்டடத்தின் உரிமை தொடர்பில் தகராறு ஏற்பட்டதால் சந்தேக நபர்கள் சொத்துக்களை சேதப்படுத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளதுடன், இந்த கட்டடத்தில் இரண்டு தூதரகங்களும் அமைந்துள்ளதாக கூறப்படுகிறது.

கிரீன் லங்கா கட்டடத்தின் உரிமை தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகவும், வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருவதாகவும் தெரிவித்த பேச்சாளர், இந்தக் கட்டிடம் கிரீன் லங்கா நிறுவனத்துக்குச் சொந்தமான அடமானம் வைக்கப்பட்ட கட்டடம் என்றும் குறிப்பிட்டார்.

கட்டடத்தின் பல மாடிகள் மூடப்பட்டுள்ள நிலையில் பலவந்தமாக நுழைந்த குழுவினர் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கட்டடத்தில் சர்ச்சைக்குரிய போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, ஞாயிற்றுக்கிழமை காலை தனது சேவைகளை நடத்தும் மண்டபமும் உள்ளதாகவும் பெர்னாண்டோவின் மண்டபத்தை இலக்கு வைத்து குழு கட்டடத்துக்குள் நுழையவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கடவத்தை, ஹோமாகம, பத்தரமுல்ல, தெமட்டகொட, கொம்பனிவீதி மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்றும் கொம்பனிவீதி பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹரீஸூம் காரியப்பரும் தீர்வுகாண வேண்டும்

இன்னும் இன்னும் கல்முனை விவகாரத்தை இழுத்தடித்துக் கொண்டு, மாறி மாறி கருத்து கூறுவதை விட்டுவிட்டு ஹரீஸ் எம்.பியும் நிஸாம் காரியப்பரும் ஒன்றுபட்டு இதற்கு தீர்வு காண முன்வர வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை (04) வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

"கல்முனை எமது மண். அதனை பாதுகாப்பது எமது கடமை. கல்முனை விவகாரம் நீதிமன்றம் வரை சென்றுள்ளமை உண்மையில் கவலைக்குரிய விடயம்.

கல்முனைத் தொகுதி எம்.பி. ஹரீஸ் ஒன்றைக் கூற, அதற்கு மாற்றமாக எமது கட்சியின் செயலாளர் நாயகம் இன்னொன்றை கூறுகின்றார்.

முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது கல்முனை விவகாரம் குறித்து நானும் பிரதி மேயர் ரஹ்மத் மன்சூரும் தெளிவான விளக்கங்களை வழங்கினோம். அதற்காக எம்மிருவரையும் ஹரீஸ் எம்.பி.யின் ஏஜெண்டாக நிஸாம் காரியப்பர் விமர்சனம் செய்தார். இது ஒரு அபாண்டமான கருத்தாகும். நாங்கள் எவரது ஏஜெண்டும் கிடையாது. நாங்கள் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள்.

கல்முனை மக்களும் இந்த விவகாரத்தில் படிப்படியாக பொறுமை இழந்து வருவதை அவதானிக்க முடிகிறது. எனவே கூடிய விரைவில் மேற்படி இருவரும் பழையவைகளை மறந்து இதற்கான தீர்வை முன்வைக்க வேண்டும். இல்லையேல் கல்முனை மக்கள் இவர்கள் இருவரையும் ஓரம்கட்டுவார்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை" என்றும் யஹியாகான் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சிலிண்டர் விலையை குறைத்தது லிட்ரோ

ஞாயறு நள்ளிரவு முதல் இந்த விலைக்குறைப்பு அமலாகும் என்றும் 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 181 ரூபாயாலும் 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 83 ரூபாயாலும் குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 3,186 ரூபாயாகவும், 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 1,281 ரூபாயாகவும், 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 598 ரூபாயாகவும் குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோட்டாபயவை குடிபெயர்த்த சத்தம்

மலலசேகர மாவத்தையில் அவருக்கு ஒதுக்கப்பட்ட பங்களா மிகவும் சத்தமாக இருப்பதன் காரணத்தாலேயே இந்த புதிய பங்களாவுக்கு அவர் குடிபெயர்ந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைத் தளபதி மற்றும் விமானப்படைத் தளபதியின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு அருகில் அமைந்துள்ள இந்த

பங்களா, வெளிவிவகார அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டிருந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் அரசாங்கத் தலைவர்கள் பேச வேண்டியிருந்தாகவும் முன்னாள் ஜனாதிபதி பதவி வகித்த போது அவருக்கு வழங்கப்பட்ட அதே பாதுகாப்புக் குழுவே பாதுகாப்பு வழங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தடுப்பதற்கான செயற்பாடுகளை இலங்கை விரைவில் ஆரம்பிக்கும்

மேற்படி செயற்பாடுகள் நாட்டின் வணிகச் செயற்பாடுகளை இலகுபடுத்துவது தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் போன்ற விடயங்கள் மீது நேரடியாக தாக்கம் செலுத்தும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா கிரேண்ட ஹோட்டலில் சனிக்கிழமை (03) நடைபெற்ற சட்டத்தரணிகள் மாநாட்டின் 2 ஆம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"பொருளாதாரத்தை வழமைக்கு திருப்பும் முயற்சிகளில் நீதிக் கட்டமைப்பின் பணியும் வணிக நிலைத்தன்மையும்" என்ற தொனிப்பொருளின் கீழ் இடம்பெற்று வரும் மேற்படி மாநாடு ஞாயிற்றுக்கிழமை (04) நிறைவடையவுள்ளது.

சட்டவிரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவிகளை வழங்குவதை தடுப்பதற்காக காணப்படும் சட்டதிட்டங்களின் இடைவெளிகளை விரைவில் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் இலங்கை மூலோபாய குறைபாடுகள் கொண்ட நாடாக பட்டியலிடப்படலாம் என்றும் அதனால் நாட்டின் அபிவிருத்திக்கு பாதகமான விளைவுகள் ஏற்படலாம் என்றும் அறிவுருத்தினார்.

தேசிய கொள்கையொன்றின் கீழ் நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் இதன் போது வலியுறுத்திய ஜனாதிபதி, தேசிய கொள்கை வகுப்பதற்கான குழுவை நியமிக்கும் பணிகள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசிய கொள்கை வகுப்புச் செயற்பாடுகளின் போது அனைத்து தரப்பினரதும் இணக்கப்பாடுகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தாலும், மேற்படி விடயங்கள் குறித்து உடன்பாடு ஒன்றை உருவாக்கி அவற்றை அமுல்படுத்துவதற்கான முனைப்புக்களை மேற்கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னயை அரசாங்கங்கள் தேசிய கொள்கை ஒன்றை வகுக்கத் தவறியதன் காரணமாகவே இன்றளவில் நாட்டின் பிரச்சினைகள் உக்கிரமடைந்துள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இங்கு கருத்து தெரிவித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌஷல்ய நவரத்ன, இந்த மாநாட்டின் வாயிலாக நீதித் துறையினர், கொள்கை தயாரிப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் வியாபாரத் துறையினர் மத்தியிலான கருத்தாடல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார். அத்தோடு ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியம். மேலும், தொழில் மற்றும் தொழில்முனைவோர், சட்டத்தின் ஆட்சியை ஏற்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சுதந்திரம் பெற்றதிலிருந்து 75 வருடங்களின் பின்னர் அபிவிருத்தி அடைந்த இலங்கை தொடர்பிலான எதிர்பார்ப்புகள் தற்போது முதல் முறையாக ஏற்பட்டுள்ளதென தெரிவித்த தேசிய சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் தலைவர் பைசர் முஸ்தபா யுத்தம் மற்றும் தவறான பொருளாதார கொள்கைகள் என்பனவே பொருளாதார வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்தியது என்றும் தெரிவித்தார்.

அதனால் கடந்த கால தவறுகளை திருத்திக்கொண்டு எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்க சகலரும் முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம் ,உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் இந்நாட்டு சட்டத்துறையின் முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## நியமித்தால் மன்றங்கள் அரசியல் மயமாகும்

இதன் காரணமாக ஏனைய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படும் என்றும்

இது தொடர்பில் பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியாக முறைப்பாடுகளை சமர்ப்பித்துள்ளதாகவும் ஆணைக்குழு கூறியுள்ளது.

அதற்கமைய, உள்ளூராட்சி மன்றங்களின் மேற்பார்வைக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரின் பிரதிநிதியை நியமிக்கும் தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என்பதை உள்ளூராட்சி அமைச்சுக்கு எதிர்வரும் சில தினங்களில் எழுத்துமூலம் அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் இணைப்பு மற்றும் தேவையான தகவல்களை மாநகர ஆணையாளர் அல்லது அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களின் பிரதேச செயலாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் இதற்காக வேறு ஒரு பிரதிநிதியை நியமிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

# ”முல்கம்பொல அக்கா” விழுங்கியதால் சிக்கல்

■ ஷேன் செனவிரத்ன

கண்டி ஊழல் மோசடி தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் பெண்ணொருவரை கைது செய்வதற்கான முயற்சியை மேற்கொண்ட போது, அந்தப் பெண், தன்னிடமிருந்த ஹெரோய்ன் போதைப்பொருள் உருண்டையை விழுங்கிவிட்டார்.

இதனால் பாதிக்கப்பட்ட அந்தப் பெண், கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த பெண் உள்பட இன்னும் சிலர், முல்கம்பொல பிரதேசத்தில் வாகனமொன்றுக்குள் இருந்து போதைப்பொருள் விற்பனை செய்வதாக சனிக்கிழமை (03) அதிகாலை வேளையில் தகவல் கிடைத்துள்ளது.

அதிநவீன சொகுசு வாகனத்தின் உள்ளே இருந்துகொண்டு போதைப்பொருளை விற்பனை செய்துள்ளனர். அந்த வாகனத்தை சுற்றிவளைத்த போது, அப்பெண் தன்னிடமிருந்த ஹெரோய்ன் போதைப்பொருள் அடங்கிய உருண்டையை விழுங்கிவிட்டார்.

“முல்கம்பொல அக்கா” என்றழைக்கப்படும் 40 வயதான பெண்ணே இவ்வாறு விழுங்கியுள்ளார். அதன்பின்னர் அப்பெண்ணைக் கைது செய்த பொலிஸார், வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

போதைப்பொருள் வழக்கில்,கண்டி மேல் நீதிமன்றத்தால் அப்பெண் பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்தப் பெண் இருந்த நவீன ரக வாகனத்துக்குள் மேலும் மூவர் இருந்துள்ளனர். அவர்களில் ஒருவரிடமிருந்து 10 கிராம் ஹெரோய்ன், மற்றைய இருவரிடமிருந்தும் தலா ஐந்தரை கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

கண்டி பேராதனை வீதியில் முல்கம்பொலயில் பிரதான ஆண்கள் மற்றும் பெண்கள் பாடசாலைகளுக்கு இடையில், இந்த போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன..

# மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள்



மக்கள் பிரதிநிதிகளுக்கே இந்நிலை என்றால் மக்களின் நிலையை எண்ணிப்பாருங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் சம்வத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ள சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் எம்.பியுமான முருகேசு சந்திரகுமார் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம், வடமராட்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் சம்பவம் நாட்டில் தமிழ் மக்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள் என்பதனை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது என்றார்.

மக்களால் தெரிவுச் செய்யப்பட்ட பிரதிநிதி ஒருவர் நாட்டில் சுந்திரமாக செயற்பட முடியாத சூழல் காணப்படுகிறது என்றால் அப்பாவி தமிழ் மக்களின் நிலைமையை எண்ணிப்பாருங்கள்? அவர்கள் எப்படி நடத்தப்படுவார்கள், என்பதனை சிந்தித்து பாருங்கள் எனக் கேட்டார்.

தன்னுடைய மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை, பிரச்சினைகளை கேட்டறிவதற்கு கூட ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இந்த நாட்டில் சுந்திரம் இல்லாத நிலைமை வடக்கு, கிழக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கண்காணிப்புகள், அச்சுறுத்தல்கள் என்பன யுத்தம் நிறைவுற்று 14 ஆண்டுகள் கடந்தும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இது இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்துக்கும் நிலையான சமாதானத்துக்கும் ஏற்புடையதல்ல. இவ்வாறான சம்பவங்கள் இனங்களுக்கிடையே குரோதத்தை மென்மேலும் வளர்த்துக்கொண்டே செல்லும். எனவே, இச் சம்வபங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் மற்றும் அவரது செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# ஆணின் சடலம் மீட்பு

■ ஆ.ரமேஸ்

வலப்பனை, மத்துரட்ட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோப்பிவத்த கலபட விகாரை பகுதியில் தனி வீடொன்றில் வசித்துவந்த எம்.அபேகோன் பண்டார (வயது 73) கை,கால் கட்டப்பட்டு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மத்துரட்ட பொலிஸார் மீட்டுள்ளனர்.

வயோதிபரின் மனைவி, பொசன் தினத்தில் கலபட விகாரைக்கு காலை சென்று மாலை வீடு திரும்பிய போது கணவர் நித்திரை செய்த கட்டிலிலேயே இவ்வாறு உயிரிழந்து கிடந்துள்ளார். இது தொடர்பில் மனைவி, அயலவர்கள் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மற்றும் அயலவர்கள் சடலத்தை மீட்டுள்ளனர். எனினும், அவருடைய வீட்டிலிருந்த பல பொருட்கள் ஆங்காங்கே சிதறி கிடைந்துள்ளன. கொள்ளையடிக்க வந்தவர்களே, அவரை கட்டிவைத்து படுகொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதல் ஹஜ் குழு புறப்பட்டது



■ நூருல் ஹுதா உமர்

இலங்கையின் ஹஜ் முகவர் நிலையமான சாய்ந்தமருது முல்தஸம் ஹஜ் ட்ரவல்ஸின் 63 யாத்ரிகர்களை உள்ளடக்கிய இலங்கையின் முதல் ஹஜ் யாத்ரிகர்கள் குழு ஞாயிற்றுக்கிழமை (04) காலை, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புனித மக்கா மாநகர் நோக்கி புறப்பட்டது.

இவ்வருடம் இலங்கையில் இருந்து புறப்படும் முதலாவது குழுவை இலங்கைக்கான சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானி விமான நிலையத்தில் வரவேற்று மக்கா நோக்கி வழியனுப்பினார்.

உலகின் அனைத்து பகுதிகளிலிருந்தும், ஹஜ் கிரியைகளை நிறைவேற்றுவதற்காக வருகை தரும் ரஹ்மானின் விருந்தினர்களை சவூதி அரசாங்கம் பெரிதும் வரவேற்பதாகவும், இரு புனிதஸ்தலங்களினதும் பாதுகாவலரின் அரசாங்கம் அல்லாஹ்வின் வீட்டிற்கு வருகைதரும் யாத்ரிகர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது என்றும், அவர்களின் வசதியை உத்தரவாதப்படுத்துவதற்கும், தமது ஹஜ் கிரியைகளை மிகவும் எளிதாக நிறைவேற்றுவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும் சவூதி அரேபியாவின் தூதுவர் தனது சிறு உரையில் தெரிவித்தார்.

மௌலவி ஏ.எஸ். எம். சம்சுத்தீனால் கிழக்கு மாகாணத்தில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட சாய்ந்தமருது முல்தஸம் ஹஜ் ட்ரவல்ஸ் தனது 59ம் வருட ஹஜ் பயணத்தை மேற்கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாரின் மரணத்திக்கு பின்னர் இந்த முல்தஸம் ஹஜ் ட்ரவல்ஸ் ஆனது அன்னாரின் புதல்வர்களான மௌலவி எம்.எஸ்.எம்.சுஹுருத்தீன் மற்றும் எம்.எஸ்.எப்.ஆர். முகத்தஸி ஆகியோர்களினால் இயங்கிவருகிறது.

இந்நிகழ்வில், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இசட். ஏ. எம். பைசல், இலங்கை ஹஜ் கமிட்டியின் தலைவர் இப்ராஹிம் சாஹிப் அன்சார், சமய விவகார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கையின் ஹஜ் முகவர் நிலையங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நிவர்த்திச் செய்யும் பயிற்சித் திட்டம்



■ நூருல் ஹுதா உமர்பா

பாலின அடிப்படையிலான வன்முறையின் (GBV) அழுத்தமான பிரச்சினையை நிவர்த்தி செய்யும் முயற்சியாக, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொது சுகாதார மருத்துவிச்சிகளுக்கான விரிவான பயிற்சித் திட்டத்தை அண்மையில் ஏற்பாடு செய்தது. சமூகத்தில் பாலின அடிப்படையிலான வன்முறையின் வழக்குகளுக்கு திறம்பட பதிலளிப்பதற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களுடன் மருத்துவிச்சிகளை தயார்படுத்துவதற்காக இந்த பயிற்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பிராந்திய மனநலப் பிரிவின் நிபுணரான டாக்டர் எம். ஜே.நௌஃபல் நிகழ்ச்சியின் வளவாளராகக் கலந்து கொண்டார். வன்முறை வகைகள், ஆபத்து காரணிகள், உயிர் பிழைத்தவர்களுக்கான ஆதரவு, சட்ட அம்சங்கள் மற்றும் பரிந்துரை அமைப்புகள் உட்பட பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன. மேலும் அமர்வுகளில் விவாதங்கள், வழக்கு ஆய்வுகள் ,கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கான பங்கு நாடகங்கள் என்பன இடம்பெற்றன.



# மது எதிர்ப்பு தினம் 2023 ஆரம்பித்து வைப்பு

■ யது பாஸ்கரன்

சர்வதேச புகைத்தல் - மது எதிர்ப்பு தினம் 2023 ஆரம்பித்து கிளிநொச்சியில் வைக்கப்பட்டுள்ளது

நாடளாவிய ரீதியில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் மே மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதி விழிப்புணர்வு மற்றும் கொடிவிற்பனை வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்தில் குறித்த செயற்றிட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்கு கொடிகள், ஸ்டிக்கர்கள் மற்றும் உண்டியல்கள் வழங்கி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும் “புகைத்தலிலிருந்து மீண்ட ஓர் கிராமம் : மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் தேசம்" எனும் தொனிப்பொருளில் நடப்பாண்டுக்கான கொடி வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

சர்வதேச புகைத்தல் - மது எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கொடி வாரத்தில்,புகைத்தல் தொடர்பான விழிப்புணர்வை சமூக மட்டத்தில் ஏற்படுத்தும் நோக்குடன் குறித்த கொடிவார தினம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்கள், பிரதேச செயலக நிதி உதவியாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

# 40 கஞ்சா செடிகளுடன் ஒருவர் கைது

■ ராமு தனராஜா

40 கஞ்சா செடிகள் 510 கிராம் உலர்ந்த கஞ்சாவுடன் நபர் ஒருவர் அம்பகஸ்தோவையில் கைது.

அப்புத்தளை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து பன்வில அம்பகஸ்தோவை பகுதியில் சுற்றிவளைத்து தேடுதலை மேற்கொண்ட போது பயிரிடப்பட்ட 40 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பன்வில பகுதியை சேர்ந்த 48 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டார். குறித்த சந்தேக நபரை சோதனைக்கு உட்படுத்திய போது அவரிடமிருந்து உலர்ந்த கஞ்சா 510 கிராம் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது கஞ்சா செடிகள் மற்றும் உலர்ந்த கஞ்சாவுடன் சந்தேக நபரையும் விஷேட அதிரடிப் படையினர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அம்பகஸ்தோவை பொலிஸார் தெரிவித்தனர்.

# குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு



■ எப்.முபாரக்

பல வருடங்களாக மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசங்கள் எதிர்நோக்கிவருகின்ற குடிநீர் பிரச்சினையின் உண்மைத் தணமையை அடையாளம் கண்டு அதற்குரிய நிரந்தரத் தீர்வைப்பெற்றுக்கொள்வதற்காக நீலாப்பொல நீரேற்றும் நிலையத்திற்கு (Intake Pumping Station) திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் விஜயம் செய்து அப்பகுதியில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

நீரேற்றும் இடத்திற்கு மகாவலி நீர் வருவதில்லை. தற்பொழுது நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நீரேற்றும் இடத்திற்கு நீரைக் கொண்டுவருகிறார்கள். நீர் இறைக்கும் இயந்திரத்திற்கு ஏதாவது கோளாறு ஏற்படுமாக இருந்தால் நீர்விநியோகம் தடைப்படும் என்பதை எடுத்துரைத்தனர்.

குறித்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு எதிர்வரும் வாரங்களில் அதற்கான திட்டவரைவொன்றினை கிழக்கு மாகாண பிரதிப் பொதுமுகாமையாளரிடம் பாராளுமன்ற உறுப்பினர் கோரியுள்ளார்.

உரிய அமைச்சு மற்றும் திணைக்களங்களில் அனுமதியைப்பெற்று நிரந்தரத்தீர்வைப் பெற்றுக்கொள்ளவிருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

# “உரிய இடத்தில் தீர்வு” புதனன்று ஆரம்பம்



திருகோணமலை மாவட்ட மக்களின் பிரச்சினைகளுக்கு “உரிய இடத்தில் தீர்வு” வழங்கும் நோக்கில், நடமாடும் சேவையொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம்பெறவுள்ளதாக கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.பாயிஸ் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தல்களுக்கமைவாக, ஆளுநர் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவை எதிர்வரும் 07 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளை குறித்ததினத்தில் தெரிவிக்க முடியும் எனவும், அவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற பிரச்சினைகள் பற்றிய விடயங்களை சம்மந்தப்பட்ட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர்களுடன் மீளாய்வு செய்யப்பட்டதன் பின்னர், அவர்களுக்கான தீர்வினை அன்றையதினம் 2.00 மணியிலிருந்து கிழக்கு மாகாண ஆளுநரினால் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக, அன்றையதினம் பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு மாத்திரமே தீர்வு வழங்கப்படவுள்ளதால், அரச ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பான எந்தப் பிரச்சினைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் பாயிஸ் சுட்டிக்காட்டினார்.

# கௌரவிப்பு

■ சண்முகம் தவசீலன்



2021 ம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கான கௌரவிப்பு கொமர்ஷல் வங்கியினால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த கௌரவிப்பு நிகழ்வு கொமர்ஷல் வங்கி, முள்ளியவளை கிளையினரால் முள்ளியவளை மாஞ்சோலை பகுதியில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி மண்டபத்தில் சனிக்கிழமை (03) சிறப்பாக இடம்பெற்றது.

கொமர்ஷல் வங்கியில் சேமிப்பை மேற்கொண்டிருந்த 2021ம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலை மட்டத்தில் முதல் 03 இடங்களை பெற்ற மாணவர்கள் முறையே ரூ.10,000, ரூ.7,500, ரூ.5,000 பணப்பரிசுடன், சான்றிதழ்களும்,பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# மக்களின் வாக்குரிமைக்கு மீண்டும் ஆப்புவைக்கும் முயற்சியா?

ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் 05 ஆம் திகதியன்று நடைபெற்றது. அதற்குப் பின்னர், நாட்டில் எந்தவொரு தேர்தலும் நடத்தப்படவில்லை. அந்தத் தேர்தலில் ஓர் ஆசனத்தைக்கூட ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி கொள்ளவில்லை. எனினும், அக்கட்சிக்குக் கிடைத்த வாக்குகளின் பிரகாரம் ஓர் ஆசனம் கிடைத்தது.

அந்த ஆசனமும் நீண்ட நாட்களுக்குப் பின்னர், அக்கட்சியின் தலைவரும், தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டது. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் வலுவடைந்திருந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஷ, தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார். அதன் பின்னர், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

போராட்டக்காரர்களின் கடுமையான அழுத்தம், ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், அலரிமாளிகை ஆகியன போராட்டக்காரர்களால் சுற்றிவளைக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டதை அடுத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம், தற்காலிக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் போது, ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அதன்பின்னர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. மாகாண சபைக்கான தேர்தல் தொடர்பில் எவ்விதமான பேச்சும் இல்லை மூச்சும் இல்லை. இதற்கிடையே பழைய முறைமையின் கீழ், மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தனிநபர் யோசனையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவிருக்கின்றார்.

ஆக, கடந்த இரண்டரை வருடங்களாக நாட்டில் எந்தவொரு தேர்தலும் நடத்தப்படவில்லை. எதிர்க்கட்சிகளும் ஏனைய அமைப்புகளும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவமாறு வலியுறுத்தியபோதும், பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே பிரதான நோக்கமென ஜனாதிபதி பதிலளித்து விடுகின்றார்.

எனினும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

அதில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்றும், எதிர்கட்சிகளின் வரிசையில், சஜித் பிரேமதாஸ, அனுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் பெயர்களும் அடிபடுகின்றன.

இதற்கிடையே, நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை (02) நடைபெற்ற "2023/ 2024 தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "பாராளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் 50 சதவீதமான பலத்தை பெற்றுக்கொள்ள முடியாது என்பதால் தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெக்க சகலரும் ஒன்றுபட வேண்டியது அவசியம்" என்று வலியுறுத்தினார். இது எதிர்க்கட்சிகள் ஒரு குடையின் கீழ் வருவதை தடுக்கும் சொல்லாடலாகக் கூட இருக்கலாம்.

இந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். தேர்தலை நடத்தாமல் விடுவதற்கான காரணங்களாகவே இவை சொல்லப்படுகின்றன. மக்களின் மனங்களை சுரண்டி பார்க்காது விடுக்கப்படும் இவ்வாறான அறிவிப்புகள் மக்களின் வாக்குரிமைக்கு மீண்டும் மீண்டும் ஆப்புவைக்கும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

சகல உயிர்களையும் சமனாக மதித்து, எந்தவித எதிர்பார்ப்புகளுமற்ற பரோபகார சிந்தனையுடன் மனம், வாக்கு, தேகத்தால் தீங்கு வளைவிக்காதவராய் மாறாத, திட நோக்குடன் இருப்பதே தவத்தின் வடிவமாகும்.

குறித்தவோர் ஆற்றலை வளர்ப்பதற்காக மன ஒடுக்கம் அத்தியாவசியமாகின்றது. புலனடக்கத்தைத் தூய சிந்தனை உண்டாக்குகின்றது.

இந்தப் புலனடக்கத்தை உருவாக்குகின்ற வலுமிக்க ஆற்றலை, "தவம்" ஏற்படுத்த ஏதுவாகின்றது. தவக் கோலத்தில் இருந்தால் மட்டுமே, இறைவன் கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதில்லை.

சாதாரண நிலையிலுள்ள எந்த மனிதரும், தம் நல்ல இயல்புகள் மூலம் எல்லோரையும் போல, படைத்த கடவுளால் ஆசிர்வதிக்கப்படுகின்றார். இறைவனுக்கு எல்லோரும் சமம்.

-பருத்தியூர் பாலவயிரவநாதன்

# தமிழ்த் தேசியத்தை சிதைப்பதற்கான தந்திரோபாயங்கள்



என்.கே.அஷோக்பரன்

தேசம், மற்றும் தேசியம் என்றால் என்ன என்பது மிகப்பெரியதொரு ஆய்வுப்பரப்பு. இவற்றை வரவிலக்கணப்படுத்துவது கூட சுலபமான காரியங்கள் அல்ல. புலமைத்தளத்தில் அகநிலை வரவிலக்கணங்கள், புறநிலை வரவிலக்கணங்கள் என்று பல வரவிலக்கணங்களைப் பலரும் வழங்கியிருக்கிறார்கள். என்னுடைய முன்னைய பல பத்திகளில் இவை பற்றி விரிவாகப் பேசியிருக்கிறேன்.

அது என்ன புறநிலையில் அணுகும் வரைவிலக்கணம்? தேசம் என்ற சொல்லை வரைவிலக்கணம் செய்த சோவியத் யூனியனின் கொம்யூனிஸ சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலின், "வரலாற்று ரீதியாகக் கட்டமைந்த, பொதுவான மொழி, பொதுவான பிரதேசம், பொதுவான பொருளாதார வாழ்க்கை, பொதுக் கலாசாரத்தினூடாக வெளிப்படும் பொதுவான உளவியலமைப்பு ஆகிய அடிப்படைகளைக் கொண்டமைந்த, நிலையான மக்கள் சமூகமொன்று, ஒரு தேசமாகும்" என்று வரையறுக்கிறார். அதாவது, புறநிலையில் வைத்து ஆராயக்கூடிய விடயங்களான பொதுவான மொழி, பொதுவான பிரதேசம், பொதுவான பொருளாதார வாழ்க்கை, பொதுக் கலாசாரத்தினூடாக வெளிப்படும் பொதுவான உளவியலமைப்பு ஆகிய அம்சங்களை, ஒரு மக்கள் சமூகமானது, ஒரு தனித்த தேசமாக வரையறுக்க முடியும் என்கிறார்.

மறுபுறத்தில், ஏனஸ்ட் றெனன் போன்ற அறிஞர்கள், தேசம் என்ற கருத்தியலை, அகநிலையில் அணுகும் வரைவிலக்கணங்களை முன்வைக்கிறார்கள். தேசம் என்ற கருத்தியலை வரையறுக்கும் ஏனஸ்ட் றெனன், "ஒரு தேசம் என்பது, ஒருவர் செய்த தியாகம், ஒருவர் மீண்டும் செய்வதற்குத் தயாராக இருக்கும் தியாகம் என்ற உணர்வின் பாலாக, கட்டமைந்த மாபெரும் ஒற்றுமையாகும். அது கடந்த காலத்தை எண்ணத்தில் கொள்கிறது; அது நிகழ்காலத்தில் தொடர்ந்து, பொது வாழ்க்கையைக் கொண்டமைவதற்கான தெளிவான வகையில் வெளிப்படுத்தப்படும் அங்கிகாரம், விருப்பு ஆகிய உறுதியான செயற்பாடுகளினூடாகத் தன்னைப் புதுப்பித்துக்கொள்கிறது. ஒரு தேசத்தின் இருப்பு என்பது, நித்திய பொதுவாக்கெடுப்பாகும்" என்கிறார்.

இந்தப் புறநிலை, அகநிலை வரைவிலக்கணங்கள் பற்றி, மிக எளிமையாக எடுத்துரைப்பதானால், புறநிலை வரைவிலக்கணங்களானவை, குறித்த அம்சங்களை ஒரு மக்கள் கூட்டம் கொண்டிருக்கும் போது, அது ஒரு தனித்த தேசமாகும் என்கிறது. இங்கு அந்த மக்கள் கூட்டத்தின் மனநிலை, அதாவது அகநிலை விடயங்கள் கருத்திலெடுத்துக் கொள்ளப்படவில்லை. அதாவது அந்த மக்கள், அகநிலையில் தம்மை ஒரு தேசமாகக் கருதிக்கொள்கிறார்களா இல்லையா என்பதைப் புறநிலை அணுகுமுறை கருத்திலெடுப்பதில்லை.

புறநிலையம்சங்கள் எப்படியிருந்தாலும், ஒரு மக்கட் கூட்டம் தன்னை ஒரு தேசமாக உணராத வரை, தேசம் என்ற எண்ணக்கரு உதிக்காது. தாம் ஒரு தேசம் என்ற ஒரு மக்கட் கூட்டத்தின் அடையாளத்தின் கரு, அடிப்படை, அஸ்திவாரம் எல்லாம் அந்த மக்கட் கூட்டம் தம்மை அவ்வாறாக உணர்வதுதான். தமிழ்த் தேசமும் இதற்கு விதிவிலக்கல்ல. நிற்க.

வடக்கு-கிழக்கில், தமிழ் மக்களுக்குள்ளான மத ரீதியான பிரிவினைகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. ஒரு தேசத்திற்குள் மதங்கள் பல இருக்கலாம். தமிழ்த் தேசத்திற்கும், மதங்களுக்குமிடையிலான உறவு சுமுகமானதாகத்தான் பராமரித்துக்கொள்ளப்பட்டது.

இலங்கையின் பெருந்தேசியவாதம் தன்னை "இன-மதத் தேசியவாதமாக" வரையறுத்துக்கொண்ட போதும், தமிழ்த் தேசியவாதமானது தன்னை "இனத் தேசியவாதமாகவே" வரையறுத்துக்கொண்டது. அந்த வரையறையைத் தீர்மானித்ததில் பெருந்தேசியவாதத்தின் பங்கு முக்கியத்துவம் மிக்கது.

ஏனெனில் பெருந்தேசியவாதம் தனது அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டபோது, அது "தமிழ்" என்ற அடையாளத்தை மட்டும் பார்த்ததேயன்றி, மத அடையாளத்தை கருத்திற்கொள்ளவில்லை. அதற்கு முக்கிய காரணம், பெருந்தேசியவாதத்தின் மத அடையாளத்திற்கும், தமிழர்களின் மத அடையாளமும் ஒருங்கிணையும் புள்ளி, யதார்த்தத்தில் பூச்சியத்தை அண்டியிருந்தமையாகும். ஆகவே, "தமிழ்" என்ற அடையாளத்தினால் அடக்கு முறைக்குட்படுத்தப்பட்டதனால், அம்மக்கள் கூட்டம் அதே அடையாளத்தை முன்னிறுத்திய "தற்காப்புத் தேசியத்தை" கட்டமைத்தக்கொண்டது.

மதங்களை மேவிய "தமிழ்த் தேசம்" எனும் அடையாளம், வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல், சமூக அடையாளமானது. "தமிழ்த் தேசம்" எனும் அடையாளம் கட்டுறுதி பெறும் காலத்திலும் கூட, மதரீதியான அடையாளத்தை முன்னிறுத்தும் முயற்சிகள் நடந்தன. ஆனால் பெரும்பான்மைத் தமிழ் மக்கள் அதனை நிராகரித்திருந்தார்கள். "வேலா, சிலுவையா" என்ற மத ரீதியாக வாக்களிக்கக் கோரிய முழக்கம், வேல் தாங்கிய கந்தனை வணங்கும் சைவப்பெருமக்கள் நிறைந்த தேர்தல் தொகுதியில் வெற்றி காணவில்லை. அதன் பின்னர் காலவோட்டத்தில் மத ரீதியான அணுகுமுறை அடங்கிப்போனது. இதற்கு மத ரீதியிலான புரிந்துணர்வு இருந்தமையும் முக்கிய காரணம், அதேவேளை தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களின் அணுகுமுறையும் இன்னொரு காரணம். தமிழ்த் தேசிய அரசியலில் மதம் என்பது பேசாப்பொருளானது. அது மக்களுடைய தனிப்பட்ட வாழ்வின், கலாசாரத்தின் அடையாளமாக உறுதியாக நீடித்தது. ஆனால் கடந்த அரைத் தசாப்தகாலத்தில், இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டு வருவதை உணரக் கூடியதாகவுள்ளது.

மத ரீதியான பிரச்சினைகள் தமிழ் மற்றும் கிறிஸ்தவ மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில், அதிகம் தலையெடுக்கத் தொடங்கியுள்ளதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்தப் பிரச்சினைகள் மற்றும் முறுகல்கள் திடீரென்று வந்தவை அல்ல. அரசியல் பரப்பில் இடம் வழங்கப்படவில்லை. ஆனால் இன்று இவை அரசியலாக மாற்றப்படுவதற்கான அறிகுறிகள் மிகத் தெளிவாகத் தென்படுகின்றன.

அரசியல் மையவோட்டத்தில் மத அடையாளங்கள் நுழைவதற்கான பிள்ளையார் சுழி இது. அது மட்டுமல்ல, "தமிழ்த் தேசிய" அரசியலை மீள் வரைவிலக்கணம் செய்வதற்கான முயற்சியும் கூட! சிலவேளைகளில் மீள் வரைவிலக்கணம் என்பது ஒன்றை முற்றாகச் சிதைப்பதாகவும் அமையக்கூடும். அது தான் இங்கு நோக்கம் எனலாம்.

மத ரீதியான "பிளவு" ஒரு பக்கம் நடக்கத்தொடங்கியிருக்கும் போது, மறுபுறத்தில் "சாதி" ரீதியான அரசியல் இங்கு நுழைக்கப்படுவதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இலங்கைத் தமிழ் அரசியலில் சாதிக் கட்சிகள் இருந்ததில்லை. "தமிழ்த் தேசிய" அரசியலில், குறிப்பாக தமிழ் இளைஞர் ஆயுதக் குழுக்களின் எழுச்சிக்குப் பின்னர், "சாதி" ஒரு பிரச்சினைக்குரிய அம்சமாக இருந்ததில்லை. இதற்கு அர்த்தம் சமூகத்தில் சாதிகள் இல்லாதொழிந்தன என்பதல்ல. சாதிய அடக்குமுறைகள் கணிசமாகக் குறைந்தன.

ஆனால் ஆங்காங்கே சாதிய வேறுபாடுகள், பாகுபாடுகள் உள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை. அவை சட்ட விரோதமான நடவடிக்கைகள். அவற்றைச் சட்டம் கொண்டே சரிப்படுத்திவிட முடியும். ஆனால், இன்று திடீரென இலங்கைக்கு சம்பந்தமே இல்லாத "தலித்தியம்" பேசிக்கொண்டு சிலர் "சாதி அரசியலை" தமிழ் மக்களிடையே முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இலங்கை தமிழரிடையேயான சாதி அமைப்பு என்பது, வர்ணாச்சிரமத்தின் பாற்பட்டதல்ல. "தலித்தியம்" என்பது வர்ணாச்சிரமத்தின் அடிப்படையிலான சாதிகளின் பாற்றபட்டது. இந்திய சாதிக்கட்டமைப்பிலிருந்து, இலங்கை தமிழரிடையேயான சாதிக்கட்டமைப்பு அடிப்படையிலேயே வேறுபட்டது. இலங்கைத் தமிழரிடையே "தலித்தியம்" என்று பேசுவதே அடிப்படையில் அர்த்தமற்றது. தமிழ்த் தேசிய அரசியல் சாதி ஏற்றத்தாழ்வுகளை நிராகரிக்கும் அரசியலாகத்தான் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலில் திடீரென்று "சாதிய" அரசியலை இங்கு நுழைக்கக் காரணம், தமிழ்த் தேசிய அரசியலை பலமிழக்கச் செய்வதற்குத்தான் என்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழ்த் தேசியத்தை "மதம்" கொண்டு பலமிழக்கச் செய்ய ஒரு தரப்பு முயல்கிறதென்றால், அதனை "சாதி" கொண்டு பலமிழக்கச் செய்ய இன்னொரு தரப்பு முயல்கிறது. ஒவ்வொரு தரப்பிற்கு ஒவ்வொரு நிகழ்ச்சி நிரல்! இந்த "சாதிய அரசியல்" உள்நுழைப்பிற்கு, இன்று திராவிட சிந்தனையின் கட்டுப்பிடிக்குள் முழுமையாகச் சிக்கியிருக்கும் பி.பி.சி. தமிழ், இந்த "சாதிய அரசியலுக்கு" முட்டுக்கொடுக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய எண்ணம் என்பது திராவிட அரசியலுக்கு எதிரானது என்பதற்காக, அதனை தமிழ் நாட்டில் மட்டுமன்றி, இலங்கையிலும் இல்லாதொழித்துவிட திராவிடக் கூட்டம் முயல்கிறது போலும். மேலும் இலங்கைத் தமிழ்த் தேசியம் என்பது மத விரோதியல்ல, குறிப்பாக இந்து மத விரோதியல்ல. ஆகவே இதுகூட, தமிழ்த் தேசியத்தை தகர்ப்பதற்கு திராவிட அரசியலுக்கு மிக முக்கியமான தேவையாக இருக்கலாம்.

எது எவ்வாறாயினும், மத ரீதியான, சாதி ரீதியான பிளவுகளும், அதை மையப்படுத்திய அரசியலும் தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமானதொன்றல்ல என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளத் தவறினால், தமிழ்த் தேசம் என்பது சிதைந்துபோகும்.

## கடிதங்கள்

# சில்லறை பிரச்சினை

சில பிரச்சினைகளை பலரும் சில்லறை பிரச்சினையாக எடுத்துக்கொண்டு கண்டும் காணாதது போலவே இருப்பர். எனினும், சில்லறை பிரச்சினையைக் கூட ஊதி பெருப்பித்து பெரும் பிரச்சினையாக்கிவிடும் சிலரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

எனினும், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸாக இருந்தாலும் சரி, தனியார் பஸ்ஸாக இருந்தாலும் சரி, பயணிகளுக்கும் நடத்துனர்களுக்கும் இடையில் இந்த மிகுதி பணத்தை கொடுப்பது, அதிலும் சில்லறையாகக் கொடுப்பது பெரும் பிரச்சினையாகவே இருக்கின்றது.

உதாரணமாக, ஆகக்குறைந்த பஸ் கட்டணம் 37 ரூபாயாகும். பயணியொருவர் 40 ரூபாயை கொடுத்துவிட்டால், நடத்துனர் கவனிக்காமல் சென்றுவிடுவார். சில்லறையையும் கொடுக்கமாட்டார். அதேபோல, அந்த பயணத்துரத்துக்காக 50 ரூபாய் தாளை நீட்டினால், மிகுமி 10 ரூபாயை கொடுத்துவிட்டு மிகுதி 3 டூபாய்க்கு ஆட்டையைப் போட்டுவிடுவார்.

ஆனால், பயணியொருவர் 35 ரூபாவை கொடுத்துவிட்டால், எஞ்சிய 2 ரூபாயை வாங்காமல் விடவே மாட்டார். அந்த பயணியின் கையில், மற்றுமொரு 5 ரூபாய் இருந்து அதனை கொடுத்துவிட்டால், மிகுதி பணம் கிடைக்கவே கிடைக்காது. இது பயணிகளுக்கும் நடத்துனருக்கும் இடையில் அன்றாடம் நடக்கும் சம்பவமாகும்.

ஆகையால், இந்த சில்லறை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும். இல்லையேல், எந்தப் பக்கமும் இல்லாது. இடையில் இருப்பவரே சம்பாதிக்கின்றார் என்றும் பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.






# பைராஹா 'Help to Learn 2023' முயற்சியைத் தொடர்கிறது

பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி, தனது பிரதான பதப்படுத்தல் தொழிற்சாலையில் 'Help to Learn' திட்டத்தின் பிரதான வைபவத்தை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளரான ரியால் யாக்கூப் மற்றும் செயற்பாட்டுப் பணிப்பாளரான எம்.ஐ. வாஹித், சிரேஷ்ட முகாமையாளர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுடன் சுமார் 100 பிள்ளைகளும் கலந்து கொண்டனர். எல்லாலமுல்லை பள்ளிவாசல் மௌலவி மற்றும் எல்லாலமுல்லை ஆரம்ப பாடசாலையின் அதிபர் மற்றும் பிரதேச கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டனர்.

'சமூகப் பொறுப்புணர்வுள்ள, அர்ப்பணிப்பு மற்றும் முழு மனதுடன் இயங்கி வருகின்ற ஒரு நிறுவனம் என்ற வகையில், இந்த வருடாந்த முயற்சியை முன்னெடுப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் இந்த முயற்சியின் மூலம் எதிர்கால சந்ததியினர் போற்றத்தக்க வகைளில் சிகரங்களை எட்டவும், அவர்களின் கல்விச் செயற்பாடுகளில் வெற்றி பெறவும் இது வழிகோலுகின்றது. மேலும், பிள்ளைகளுக்கு உதவிக்கரம் நீட்டி, ஊழியர்களின் நிதிச் சுமையின் ஒரு பகுதியிலிருந்து அவர்களுக்கு விடுதலை அளிப்பதிலும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்,' என்று பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி இன் நிர்வாகப் பணிப்பாளரான யாக்கூத் நளீம் அவர்கள் குறிப்பிட்டார்.

இத்திட்டம் தரம் 01 முதல் 13 வரையிலான மாணவர்களுக்கு பயனளிப்பதுடன், சுமார் 600 பயனாளி; மாணவர்களுக்கு புத்தகப் பைகள், புத்தகங்கள் மற்றும் பாடசாலைக்கு அத்தியாவசியமானதாகக் கருதப்படும் காகிதாதி பொருட்கள் மற்றும் பிற பொருட்களும் வழங்கிவைக்கப்பட்டன.

பைரஹா நிறுவனம் தனது ஊழியர்களின் பிள்ளைகளுக்கு உதவும் ஒரு உண்மையான நோக்கத்துடன் 2018 ஆம் ஆண்டில் இந்த நலன்புரி திட்டத்தை ஆரம்பித்ததுடன், இது ஆண்டுதோறும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பைரஹா நிறுவனம் இதுவரை இந்த முயற்சிக்காக ரூ. 3 மில்லியன் தொகையை முதலீடு செய்துள்ளது. மேலும், தனது ஊழியர்களுக்கு உதவிக்கரம் நீட்டவும்,



அவர்களின் தங்கள் பிள்ளைகள் உயர்கல்வியை எட்டும் வரையில் படிப்பைத் தொடர சுதந்திரமான சூழலை வழங்கவும் இதுபோன்ற ஒரு முயற்சியை நடத்துவதன் நோக்கத்தை தொடர்ந்து நிலைநாட்டி வந்துள்ளது.

பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி கோழி இறைச்சி மற்றும் அது சார்ந்த உற்பத்தியில் முன்னோடியாக உள்ளதுடன், 47 ஆண்டுகளுக்கும் மேலான செழிப்பான வரலாற்றைக் கொண்டுள்ளது. நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் கோழித் தீவன உற்பத்திக்கான மூலப்பொருட்களை பெறுவது தொடங்கி, கோழி இறைச்சி மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட கோழி இறைச்சி தயாரிப்புக்கள் விற்பனைக்கு பதனிடப்படும் நிலை வரை பல்வேறு பிரிவுகளாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. பைரஹா நிறுவனம் ஒரு நிலையான வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருவதுடன், பல உள்நாட்டு மற்றும் சர்வதேச பாராட்டு அங்கீகாரங்களைப் பெற்றுள்ளது.

# சியெட் 'பாடசாலை சிறுவர்களுக்கான வீதிப் பாதுகாப்பு' திட்டம்

சியட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் 2023ன் முதல் மூன்று மாதத்தில் 20 பாடசாலைகளுக்கு வீதிப் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கி உள்ளது. இவை பிரதான வீதிகளை அண்மித்த உயர் போக்குவரத்து நெரிசல் வலயத்துக்குள் வரும் பாடசாலைகளாகும். நிறுவனத்தின் பாதுகாப்பான மற்றும் உறுதியான வீதிப் போக்குவரத்தை, மாணவர்களுக்கு ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் இவை வழங்கப்பட்டுள்ளன.

வீதிப் போக்குவரத்து தொடர்பான 150 சமிக்ஞை அட்டைகளுடன் கூடிய 330 உபகரணங்கள், 160 வீதிப் பாதுகாப்பு கூம்புகள், போக்குவரத்து சேவையில் ஈடுபடும் மாணவர்களுக்கான 20 மேல் அங்கிகள் என்பன பல மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டன. 'பாடசாலை பிள்ளைகளுக்கான வீதிப் போக்குவரத்தில் சியெட் கவனம் செலுத்துகின்றது' என்ற திட்டத்தின் கீழ் இவை வழங்கப்பட்டன. இந்தத் திட்டம் 'மக யன மக' என்றும் அழைக்கப்படுகின்றது. இந்தப் பிரத்தியேகமான சமூக நலத் திட்டமானது வீதிகளில், பாதுகாப்பின் மீது சியெட் கொண்டுள்ள அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சியெட்டின் ஏனைய எல்லா உற்பத்திகளிலும் கூட இதுவே பிரதான கருப்பொருளாக உள்ளது. பாதுகாப்பை சிந்தனையில் கொண்டே இவை உருவாக்கப்படுகின்றன என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.




இதன் மூலம் நன்மை அடைந்த பாடசாலைகள் : ஆனந்தா கல்லூரி கொழும்பு-10, அனுல வித்தியாலயம் - நுகேகொடை, பண்டாரநாயக்க மத்திய கல்லூரி-வேயான்கொடை, தம்மிஸ்ஸார தேசிய கல்லூரி-நாத்தண்டிய, களனி மகா வித்தியாலயம்-களனி, மகளிர் கல்லூரி கொழும்பு 07, மகமாய மகளிர் மகா வித்தியாலயம்-கடவத்தை, மகாநாம கல்லூரி-கொழும்பு 03, மகரகம மத்திய கல்லூரி-மகரகம, மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரி-நீர்கொழும்பு, பேலியகொட ரோமன் கத்தோலிக்க வித்தியாலயம்-களனி, ஜனாதிபதி கல்லூரி-ஹோமாகம, ஜனாதிபதி கல்லூரி-களனி, ரத்னாவலி மகளிர் மகா வித்தியாலயம்-கொழும்பு08, சித்தார்த்த கல்லூரி-வெலிகம, புனித ஜோஸப் மகளிர் வித்தியாலயம்-நுகேகொடை, புனித ஜோஸப் கல்லூரி-நுகேகொடை, புனித ஜோஸப்வாஸ் கல்லூரி-வென்னப்புவ, சுபர்தி மகாமத்ய மகா வித்தியாலயம்-ஹோமாகம மற்றும் விகாரமகாதேவி மகளிர் வித்தியாலயம்-கிரிபத்கொடை என்பனவாகும்.

பாடசாலை பிள்ளைகளுக்கான வீதிப் பாதுகாப்புத் திட்டத்தை சியெட் கடந்த ஆண்டில் மீண்டும் தொடங்கியது. நோய்ப்பரவல் நிலைமையை அடுத்து தேவைப்பட்ட ஒரு சிறிய இடைவெளியின் பின் உபகரணங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்ட ஒரு வடிவத்தில் இது தொடங்கப்பட்டது. ஆனால் இதன் அசல் வடிவம் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், போக்குவரத்து வசதிகளை வழங்குவோர் ஆகியோரோடு நேரடியாக சம்பந்தப்பட்டதாகும். குறிப்பாக பாடசாலை வேன் சாரதிகளுக்கு போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான கருத்தரங்குகள் இதில் பிரதானமாகும். வீதிப் பாதுகாப்பு கூம்புகள், பாதுகாப்பு அங்கிகள், போக்குவரத்து சமிக்ஞைகள் மற்றும் உபகரணங்களை பாடசாலைகளுக்கு நேரடியாக சென்று வழங்குதல் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.




## பொங்கல் உற்சவம்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றான வன்னிவிளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம், பாரம்பரிய முறைப்படி பல்லாயிரக்கணக்கான பக்தர்களுடன் மிக சிறப்பாக வெள்ளிக்கிழமை (02) இடம்பெற்றது.

சண்முகம் தவசீலன்

## புதுக்குடியிருப்பில்...

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் பொசன் தின (03) சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அங்கு முதன் முறையாக பொசன் கூடு அமைக்கப்பட்டது. கெப்பட்டிக்கொல்லாவ பகுதியில் இருந்து வரவழைக்கப்பட்டவர்கள், பிரித் ஓதி நூல் கட்டி விட்டனர். சிறையில் கைதிகளுக்கு பிரித்நூல் கட்டிவைக்கப்பட்டது.

(செ.கீதாஞ்சன்)





## பொசன் பக்தி பாடல்...

பொசன் தினத்தன்று (03) கண்டி, திகன, எகோல் சர்வதேசப் பாடசாலையில் பொசன் பக்தி பாடல் நிகழ்வு இடம்பெற்றது. இதில், சிங்கள, தமிழ் மாணவர்கள் இணைந்து பக்தி பாடல்களை பாடி மகிழ்வித்தனர்.

மொஹெமட் ஆஸிக்

## விழிப்புணர்வு நிகழ்வு

மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தினால் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் பிரதேச செயலக பிரிவிக்கு உட்பட்ட குருக்கள்மடம் கிராமத்தின் ஏத்தாளைக் குளத்தை மையப்படுத்தியதாக "உயிர்ப்பல்வகைமையும், ஏத்தாளைக் குளமும்" எனும் தலைப்பிலான விழிப்புணர்வு நிகழ்வு மற்றும் சிரமதான நிகழ்வு என்பன வெள்ளிக்கிழமை (02) இடம்பெற்றன.

வ.சக்தி





## மகா கும்பாபிஷேகம்...

பல நூற்றாண்டுகள் தொன்மை வாய்ந்த வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் நவதள இராஜகோபுர பணிகள் மற்றும் ஆலய புனரமைப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு ஆலயத்துக்கும் நவதள இராஜகோபுத்துக்கும் மகா கும்பாபிஷேகம் வியாழக்கிழமை (01) சிறப்புற நடைபெற்றுள்ளது.

சண்முகம் தவசீலன்



## கண்காட்சி...

திருகோணமலை பிரெய்ஸ் பூல் சர்வதேச முன்பள்ளி பாடசாலை மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான ஆக்கங்களின் கண்காட்சி வெள்ளிக்கிழமை (02) ஆரம்பமாகி, ஞாயிற்றுக்கிழமை (04) வரை இடம்பெற்றது.

ஸ்டாக்ஹோம்

# உடலுறவு விளையாட்டுக்கு அங்கிகாரம்



உலகின் பல்வேறு நாடுகளில் உடலுறவு, தன்பாலின ஈர்ப்பு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து பொதுவெளியில் பேசுவதற்கும், சினிமாவில் காட்டுவதற்கும் கடுமையான தடைகள் நிலவுகின்றன.

இந்தியாவைப் போன்ற நாடுகளில் தற்போது ஓரினச்சேர்க்கைக்கு ஆதரவான சட்டங்கள் நிறைவேறி வரும் நிலையில், இதற்கான எதிர்ப்பு குரல்களும் எழுந்த வண்ணம் இருக்கின்றன.

அதே சமயம் மேற்கத்திய நாடுகள், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பாலியல் கல்வி குறித்தும், தன்பாலின உறவு குறித்தும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த அதிக முனைப்பு காட்டப்படுகிறது. குறிப்பாக ஜூன் மாதத்தை 'பிரைட் மாதம்' (Pride month) என்ற பெயரில் ஓரினச்சேர்க்கை ஆதரவாளர்கள் கொண்டாடுகின்றனர்.

இதையெல்லாம் தாண்டி ஒரு படி மேலே சென்று, சுவீடனில் தற்போது 'உடலுறவு' என்பது ஒரு விளையாட்டுப் போட்டியாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு 'ஐரோப்பியன் செக்ஸ் சாம்பியன்ஷிப்' என பெயரிடப்பட்டுள்ளது. இதன் மூலம் உடலுறவை ஒரு விளையாட்டாக அங்கிகரித்து, அதற்கு போட்டியும் நடத்தும் முதல் நாடு என்ற பெயரை சுவீடன் பெற்றுள்ளது.

இந்தப் போட்டி வருகிற ஜூன் 8 ஆம் திகதி முதல் நடத்தப்பட உள்ளதாகவும், பல வாரங்கள் இந்த போட்டி நடத்தப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

துணையை கவர்தல், உடல் மசாஜ், வாய்வழி பாலியல், உடலுறவு, சகிப்புத்தன்மை என 16 பிரிவுகளில் போட்டி நடத்தப்பட இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த போட்டியை நடத்த 'சுவீடன் செக்ஸ் பெடரேஷன்' ஏற்பாடு செய்துள்ளது. போட்டியில் 70 சதவீதம் வாக்குகளை பார்வையாளர்கள் அளிப்பார்கள் என்றும், நடுவர்கள் 30 சதவீதம் வாக்குகளை அளிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த போட்டியில் கலந்து கொள்வதற்காக பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இருந்து 20 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர்.

வொஷிங்டன்

## கத்திக்குத்து தாக்குதல் பற்றி "புத்தகம் எழுதுவேன்"



இந்தியாவில் பிறந்த பிரபல எழுத்தாளர் சல்மான் ருஷ்டி 1988-ம் ஆண்டு எழுதிய தி சாத்தானிக் வெர்சஸ் என்ற புத்தகம் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் அவருக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. இதற்கிடையே கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமெரிக்காவின் நியூயார்க்கில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற சல்மான் ருஷ்டி மீது வாலிபர் ஒரு கத்தியால் சரமாரியாக குத்தினார்.

இந்த தாக்குதலில் அவர் ஒரு கண் பார்வையை இழந்தார். இந்த சம்பவத்துக்கு பிறகு முதல் முறையாக சல்மான் ருஷ்டி கடந்த 20 ஆம் திகதி நியூயார்க்கில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

இந்த நிலையில் தன் மீதான கத்திகுத்து தாக்குதல் சம்பவம் பற்றி புத்தகம் எழுத போவதாக சல்மான் ருஷ்டி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:- என் மீதான தாக்குதல், என்ன நடந்தது மற்றும் அதன் அர்த்தம் என்ன, தாக்குதல் பற்றி மட்டுமின்றி அதை சுற்றியும் நடந்தது பற்றியும் ஒரு புத்தகத்தை எழுத முயற்சிக்கிறேன் என்றார்.



நியூயோர்க்

## 3 நாட்களில் நகர்ந்த குழந்தை

பிறந்து 3 நாட்களிலே குழந்தை ஒன்று தலையை தூக்கிய நிலையில் நகர்கின்ற வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த நிகழ்வு அமெரிக்காவில் நடந்துள்ளது.

பெனிசில்வேனியா சேர்ந்தவர் சமந்தா எலிசபெத். இவருக்கு பெப்ரவரி மாதம் நைலா என்ற குழந்தை பிறந்துள்ளது. இக்குழந்தை பிறந்த மூன்று நாட்களில் குப்புறப் படுத்து தலையை தூக்கி நகரத் தொடங்கியிருக்கிறது. இதனை சற்றும் எதிர்பாராத சமந்தா தனது போனில் அதனை வீடியோவாக பதிவு செய்திருக்கிறார். தற்போது இந்த வீடியோ வைரலாகியது.

இதுகுறித்து சமந்தா கூறும்போது, "முதல் தடவை அவள் தனது இடத்திலிருந்து நகர்வதை பார்த்து நான் ஆச்சரியம் அடைந்தேன். என் வாழ்க்கையில், பிறந்த குழந்தை ஒன்று இவ்வளவு விரைவாக நகர்ந்ததை நான் பார்த்ததில்லை. என் குழந்தை நகர்ந்தபோது அருகில் எனது அம்மா மட்டுமே இருந்தார். நான் இந்த வீடியோவை எடுக்காமல் இருந்திருந்தால் என் கணவர் உட்பட யாரும் இதனை நம்பி இருக்க மாட்டார்கள்" என்றார்.

டோக்கியோ

## பிறப்பு விகித சராசரி 1.26 ஆக குறைந்துள்ளது

ஜப்பானின் பிறப்பு விகிதம் 2022 ஆம் ஆண்டில் தொடர்ந்து ஏழாவது ஆண்டாக 1.26 ஆகக் குறைந்துள்ளது என்று அந்நாட்டு காதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அரசு பல சலுகைகளை அறிவித்தாலும் குழந்தை பெற்றுக்கொள்வது குறைந்து வருகிறது. இதனால் வரும் 2030-க்குள் ஜப்பானின் மக்கள்தொகை அதல பாதாளத்திற்கு சென்று விடும் என அஞ்சப்படுகிறது.



125 மில்லியனுக்கும் அதிகமான ஜப்பானின் மக்கள்தொகை 16 ஆண்டுகளாக குறைந்து வருகிறது. 2070ஆம் ஆண்டு 87 மில்லியனாக குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

திருச்சி

## அண்ணனின் பைக்கை பஞ்சர் செய்துவிட்டு காதலனுடன் தங்கை ஓட்டம்

திருச்சி மாவட்டம், சமயபுரத்தை சேர்ந்த இளம்பெண் ஒருவர், அரசூர் பகுதியில் தனியார் மில்லில் வேலை செய்து கொண்டே படித்து வருகிறார். இவர், அதே ஊரை சேர்ந்த இளைஞனை காதலித்துள்ளார்.பணியில் சேர்ந்து 6 மாதங்கள் ஆன நிலையில் வீட்டிற்கு சென்று வருவதாக நிர்வாகத்திடம் அனுமதி பெற்று அண்ணனுக்கு போன் செய்து தன்னை அழைத்துச்செல்ல வருமாறு கூறியுள்ளார். அதே நேரத்தில் காதலனுக்கும் போன் செய்து அழைத்துள்ளார்.

அந்த இளம்பெண் பணி புரியும் நிறுவனத்திற்கு அண்ணனும், காதலனும் ஒரே சமயத்தில் வந்தனர். நிறுவனத்துக்குள் அண்ணன் செல்ல, காதலன் அவரது பைக் டயரை பஞ்சராக்கி விட்டு அருகில் இருந்த கடையில் ஏதும் அறியாதது போல, காதலிக்காக காத்திருந்தார். தங்கையுடன் வெளியில் வந்தவர், பைக் டயர் பஞ்சராகி உள்ளதை அறிந்து திருத்தும் நிலையத்துக்கு தள்ளிக்கொண்டு சென்றார். இந்த சமயத்தில் இளம்பெண் அங்கு தயாராக இருந்த காதலனின் டூவீலரில் ஏறி பறந்துவிட்டார்.

பெங்களூரு

## ஆண்களுக்கு 50 சதவீத இருக்கை ஒதுக்கீடு

கர்நாடகத்தில் ஆட்சி அமைத்துள்ள காங்கிரசு அரசு, தேர்தலின் போது அளித்த 5 இலவச திட்டங்களை நிறைவேற்றி உள்ளது. அதன்படி, கர்நாடகத்தில் அரசு பஸ்களில் பெண்கள் குளிர்சாதன மற்றும் படுக்கை வசதி கொண்ட பஸ்களை தவிர்த்து மற்ற பஸ்களில் மாநிலம் முழுவதும் இலவசமாக சென்று வரலாம் என்றும் சித்தராமையா அறிவித்திருந்தார்.

இந்தத் திட்டம் வருகிற 11 ஆம் திகதி முதல் அமலுக்கு வருகிறது. அதே நேரத்தில் ஒரு அரசு பஸ்சில் முழுவதுமாக பெண்கள் மட்டும் செல்ல முடியாது என்றும், ஆண்களுக்காக 50 சதவீத இருக்கைகள் ஒதுக்கப்படும் என்றும் அவர் கூறி இருந்தார்.

## இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் ஆப்கானிஸ்தானை வென்றது இலங்கை



தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Sri Lanka Cricket
Dialog

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்ற நிலையில், ஹம்பாந்தோட்டையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையின் அணித்தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, குசல் மென்டிஸின் 78 (75), திமுத் கருணாரத்னவின் 52 (62), சதீர சமரவிக்கிரமவின் 44 (46), பதும் நிஸங்கவின் 43 (56), தனஞ்சய டி சில்வாவின் ஆட்டமிழக்காத 29 (24), வனிடு ஹஸரங்கவின் ஆட்டமிழக்காத 29 (12), ஷானகவின் 23 (13) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 323 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மொஹமட் நபி, பரீட் அஹ்மட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், முஜீப் உர் ரஹ்மான், நூர் அஹ்மட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 324 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், துஷ்மந்த சமீர (2), ஷானக, தனஞ்சய டி சில்வா (3), வனிடு ஹஸரங்க (3), மகேஷ் தீக்‌ஷனவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 42.1 ஓவர்களில் 191 ஓட்டங்களையே பெற்று 132 ஓட்டங்களால் தோல்வியடைந்து, துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் ஹஷ்மத்துல்லாஹ் ஷகிடி 57 (62), இப்ராஹிம் ஸட்ரான் 54 (75), ரஹ்மத் ஷா 36 (42), அஸ்மத்துலாஹ் ஓமர்ஸாய் 28 (31) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக தனஞ்சய டி சில்வா தெரிவானார்.

### டயலொக் திறந்த கோல்ப் சம்பியன்ஷிப்:
## சம்பியனான டிவேடி

Dialog SRI LANKA OPEN

டயலொக் திறந்த கோல்ப் சம்பியன்ஷிப்பில் இந்தியாவின் டிவேடி சமரத் சம்பியனானார்.

றோயல் கொழும்பு கோல் மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி நாளில் 69 புள்ளிகளைப் பெற்று மொத்தமாக 271 புள்ளிகளுடன் சமரத் சம்பியனானார்.

பங்களாதேஷின் ஹொஸைன் ஜமாலும், இந்தியாவின் ஓம்பிரகாஷும் தலா 273 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தை பகிர்ந்து கொண்டனர்.



### கந்தளாய் அல் ஜாயா விளையாட்டுக் கழகத்துக்கு
## விளையாட்டு மேலங்கிகள் கையளிப்பு.

எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.சி.எம். ஜவாஹிரின் நிதியுதவி மூலம் கந்தளாய் அல் ஜாயா விளையாட்டு கழக விளையாட்டு வீரர்களின் நன்மை கருதி, சொந்த நிதியில் கால்பந்தாட்டத்துக்கான மேலங்கிகளை விளையாட்டுக் கழக வீரர்களிடம் அண்மையில் கையளித்தார்.

### நுவரெலியா விளையாட்டுக் கழக ஸ்னூக்கர், மேசைப்பந்து, பில்லியட்ஸ்
## முதலிடம் பெற்ற ஆறுமுகம், கொடிக்கார



எஸ்.கே. குமார்

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஸ்னூக்கரில் சங்கரப்பிள்ளை ஆறுமுகமும், பிலியட்ஸில் கொடிக்காரவும் முதலிடம்க் பெற்றனர்.

ஸ்னூக்கரில் 36 பேர் பங்கேற்ற நிலையில் எம்.டி. பூசோ இரண்டாமிடத்தைப் பெற்றார்.

பிலியட்ஸில் 32 பேர் பங்கேற்ற நிலையில் எம்.டி. பூசோ இரண்டாமிடத்தைப் பெற்றார்.

மேசை பந்து இரட்டையர் போட்டியில் எம். சலீம், அநுர டீ சில்வா முதலாமித்தையும் அருணசாந்த ஹெட்டியாராச்சி, பிறின்ஸ் சலீம் இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

பில்லியட்ஸ் இரட்டையர் போட்டியில் சமீந்த கொடிக்கார, சுகததாஸ ரவீந்திர முதலாமிடத்தையும், அநுர சேனரட்ன, யசித்த பிடிகல ஆகியோர் இரண்டாமிடத்தையும் பெற்றனர்.



### எஃப்.ஏ கிண்ணத் தொடர்:
## யுனைட்டெட்டை வீழ்த்தி சம்பியனான சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க (எஃப்.ஏ) சவால் கிண்ணத் தொடரில் மன்செஸ்டர் சிற்றி சம்பியனாகியது.


வெம்ப்ளியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான விலகல் முறையிலான இத்தொடரின் இறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே சிற்றி சம்பியனாகியது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் இல்கி குன்டோகன் பெற்றதோடு, யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ப்ரூனோ பெர்ணாண்டஸ் பெற்றிருந்தார்.

# அந்த '10' நிமிடங்கள்



# 380 பேர் பலி



தேசத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ள ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 380 ஆக அதிகரித்துள்ளது. 900க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். மீட்புப் பணிகள் நிறைவு பெற்றுள்ளதாகவும், சீரமைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 'லூப்' லைனில் சென்றதால் கோர விபத்து

ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டத்தில், கண்ணிமைக்கும் நேரத்தில் மூன்று ரயில்கள் ஒரே இடத்தில், வெள்ளிக்கிழமை (02) இரவு விபத்துக்குள்ளாகின.

ரயில் விபத்து குறித்து விசாரணை செய்த உயர்மட்ட குழு,

கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் லைன் மாறி சென்றதுதான் இந்த கோர விபத்துக்கு முக்கிய காரணமென முதற்கட்ட விசாரணையின் தகவல் தெரிவிப்பதாக பி.டி.ஐ. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

பஹனாகா பஜார் ரெயில் நிலையம் அருகே நான்கு ரயில் தண்டவாளங்கள் உள்ளன.

அதில் ஒன்று லூப் லைன். ரயில் நிலையம் அருகே மற்ற ரயில்களுக்கு வழி விடவும், ரயில்கள் எளிதாக சென்று வருவதற்காகவும் லூப் லைன் அமைக்கப்படும். சுமார் 750 மீட்டர் நீளம் கொண்ட அந்த லூப் லைனில்தான் சரக்கு ரயில் நின்று கொண்டிருந்துள்ளது. மெயின் லைனில் வரக்கூடிய கோரமண்டல் எக்ஸ்பிரஸ் திடீரென லூப் லைன் வழியாக சென்றுள்ளது.

128 கி.மீட்டர் வேகத்தில் வந்த கோரமண்டல் ரயில் எதிர்பாராத விதமாக அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு ரெயில் மேல் மோதி விபத்துக்குள்ளானது. அந்த விபத்தில் தடம் புரண்ட பெட்டிகள் மற்றொரு தண்டவாளத்தில் சரிந்து விழுந்ததால் அந்த வழியாக 116 கி.மீட்டர் வேகத்தில் வந்த பெங்களூரு-ஹவுரா எக்ஸ்பிரஸ், தடம் புரண்ட கோரமண்டல் ரயில் பெட்டிகள் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

முழுமையான விசாரணை நடைபெற்று வரும் நிலையில், நாசவேலைக்கான சாத்தியக்கூறுகள் குறித்து இதுவரை அதிகாரிகள் யாரும் பேசவில்லை. முழு விசாரணை முடிந்த பின்னர்தான் இதுகுறித்து தகவல் வெளிப்படையாக தெரியவரும்.

ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டத்தில் உள்ள பஹனாகா என்ற இடத்தில் வெள்ளிக்கிழமை(02) இரவு 6.45 மணியளவில் இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் ஒட்டுமொத்த ரயிலும் குலுங்கி கவிழ்ந்ததாகவும், உடல் பாகங்கள் ரத்த வெள்ளத்தில் சிதறிக் கிடந்ததாகவும், உயிர் தப்பித்த பயணிகள் கூறினர்.

விபத்தை சந்தித்த கோரமண்டல்-ஷாலிமர் எக்ஸ்பிரஸ் ரயிலில், பிஹாரைச் சேர்ந்த தின ஊதிய தொழிலாளி சஞ்சய் முகியா என்பவர் பயணம் செய்தார். ரயில் விபத்து குறித்து அவர் கூறுகையில்,

"நான் சென்னை நோக்கி சென்ற கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்தேன். ரயில் மோதியபோது நான் கழிவறையில் இருந்தேன். திடீரென ஒட்டு மொத்த ரயிலும் பயங்கர சத்தத்துடன் அதிர்ந்து குலுங்கி கவிழ்ந்தது. உருக்குலைந்த ரயில் பெட்டியில் இருந்து சிறிது நேரத்தில் நாங்கள் மீட்கப்பட்டோம். வெளியே வந்து பார்த்தபோது, ரயில் பெட்டிகள் ஒன்றின் மீது ஒன்று மோதிக் கிடந்தன. பயணிகளின் உடைமைகள் எல்லாம் எங்கும் சிதறிக் கிடந்தன. உருக்குலைந்த ரயில் பெட்டியில் இருந்து, உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்பு படையினர் மீட்டு அடுக்கி வைத்திருந்தனர். இவ்வாறு சஞ்சய் முகியா தெரிவித்தார்.

மற்றொரு பயணி ஒருவர் கூறுகையில், "ரயில் தடம்புரண்டபோது, நான் தூங்கிக் கொண்டிருந்தேன். என்மீது 10 முதல் 15 பேர் விழுந்தனர். நான் ரயில் பெட்டியை விட்டு வெளியே வந்தபோது, எங்கும் கை, கால்கள் சிதறிக் கிடந்தன. ஒருவரது முகம் உருக்குலைந்த நிலையில் இருந்தது" என்றார்.

முகமது அக்யூப் என்ற பயணி கூறுகையில், "நான் மிகப் பெரிய மாணவர்கள் குழுவுடன் கேரளாவுக்கு சென்று கொண்டிருந்தேன். 3 பெட்டிகளில் நாங்கள் பயணம் செய்தோம். திடீரென பயங்கர மோதல் சத்தம் கேட்டது. ரயில் பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி கவிழ்ந்தன. நாங்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தோம். ரயில் பெட்டிகளின் ஜன்னல் வழியாக நாங்கள் மீட்கப்பட்டோம். இனி நாங்கள் எங்கும் செல்ல விரும்பவில்லை. எங்கள் சொந்த மாநிலமான பிஹாருக்கு திரும்புகிறோம்" என்றார்.

கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயிலில் பயணம் செய்த அனுபவ் தாஸ் கூறுகையில், " கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டு சரக்கு ரயில் மீது மோதியது போல் தெரிகிறது. இந்த விபத்தில் நானே 250 பேருக்கும் மேற்பட்டவர்களின் மரணத்தை பார்த்தேன். பல குடும்பங்கள் இந்த விபத்தில் அழிந்துவிட்டன. கை, கால்கள் அற்ற உடல்கள் ரத்த வெள்ளத்தில் தண்டவாளத்தில் கிடக்கின்றன. இந்த காட்சியை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல்கள்" என குறிப்பிட்டுள்ளார்.

சரியாக 06:20 மணிக்கு பாலசோர் ரயில் நிலையத்திற்கு ரயில் வந்தது. அங்கிருந்து கிளம்பி 15 நிமிடம் தான் இருக்கும். சரியாக 06:45 மணிக்கு விபத்து நேர்ந்தது. அந்த '10' நிமிடங்கள் தங்களுக்கு மரண பயத்தை ஏற்படுத்தியிருந்தது என பயணிகள் பலரும் கருத்து தெரிவித்தனர்.




## 'கவாச்' தடுத்திருக்கும்

கவாச் தொழில்நுட்பம் இருந்திருந்தால், ஒடிசா ரயில் விபத்தை தடுத்திருக்கும் என்ற கருத்து மேலோங்கியுள்ளது.

ரயில்கள் பாதுகாப்புக்காக முழுக்க முழுக்க இந்தியாவில் உருவாக்கப்பட்ட தானியங்கி ரயில் பாதுகாப்பு அமைப்பான 'கவாச்'-ஐ, ரயில்வே அமைச்சகம் 2022-ஆம் ஆண்டு மார்ச் 23ஆம் திகதி அறிவித்தது. இதற்காக மத்திய அரசின் ரிசேர்ச் டிசைன்ஸ் அண்ட் ஸ்டாண்டர்ட்ஸ் ஆர்கனைசேஷனிற்கு மூன்று இந்திய நிறுவனங்கள் இதனை உருவாக்கிக் கொடுக்க, இந்திய ரயில்வே அதனை பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தது. கவாச் என்ற சொல் கவசம் - பாதுகாப்பு என்பதைக் குறிப்பதாகும்.

கவாச் தொழில்நுட்பமானது லோக்கோ பைலட்டுகள் என்றழைக்கப்படும் ரயில் ஓட்டுநர்களுக்கு விபத்து குறித்து எச்சரிக்கை செய்யும். எஸ்பிஏடி, சிக்னல் பாஸிங் அட் டேஞ்சர் எனப்படும் இந்த சமிக்ஞையானது ஒரே மார்க்கத்தில் இரு ரயில்கள் வந்தால் எச்சரிக்கும். மிகுந்த அடர்த்தியான பனி மூட்டம் இருக்கும்போது எதிரே ரயில் வந்தால் அலர்ட் செய்யும். எச்சரிக்கை செய்வதோடு மட்டுமல்லாமல், இது தானாகவே பிரேக் அப்ளை செய்து ரயிலின் வேகத்தை மட்டுப்படுத்தி விபத்துக்கான சாத்தியத்தை குறைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்முன்னே ஏராளமானோர் உயிரிழந்தனர்



ஒடிசா ரயில் விபத்தில் தப்பி, விமானம் மூலம் சென்னைக்கு வந்த சிலர் செய்தியாளர்களிடம் கூறுகையில், கண்முன்னே ஏராளமானோர் உயிரிழந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தோம் என்று ஒடிசா ரயில் விபத்தில் உயிர் தப்பிய தமிழகத்தை சேர்ந்தவர்கள் கண்ணீருடன் தெரிவித்தனர்.

**சென்னை சேப்பாக்கத்தை சேர்ந்த மாணவி ராஜலட்சுமி:**

நான் லயோலா கல்லூரியில் படித்து வருகிறேன். தொழில் பயிற்சிக்காக கொல்கத்தா சென்றிருந்தேன். திரும்பி வரும்போது கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயிலில் வந்தேன். நான் இருந்த பெட்டியில் சேதம் இல்லை என்றாலும், விபத்து ஏற்பட்டவுடன் பயணிகள் நிலை தடுமாறி கீழே விழுந்தனர். இதனால் பலருக்கும் காயம் ஏற்பட்டது. மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

நான் இருந்த பெட்டிக்கு முன்பாக இருந்த பெட்டிகள் அனைத்தும் கவிழ்ந்த நிலையில் இருந்தன. முன்பதிவில்லா பெட்டி, படுக்கை வசதி பெட்டி என அனைத்து பெட்டிகளும் சேதமடைந்திருந்தன. கண்முன்னே ஏராளமானோர் உயிரிழந்ததைப் பார்த்து மிகுந்த அதிர்ச்சியடைந்தேன்.



## அன்பான வார்த்தைகள் மன வலிமையை கொடுக்கும்

ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்திருந்தனர். குறிப்பாக ரஷ்ய ஜனாதிபதி புட்டின், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் பிரதமர் இமானுவேல் மேக்ரான், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், இலங்கை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க உள்ளிட்ட பல தலைவர்கள் இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளனர்.

இந்த கடினமான நேரத்தில் இந்தியாவுடன் துணை நிற்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், ஒடிசா ரெயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்காக தங்களது இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்த உலக நாடுகளின் தலைவர்களுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார். அவர்களது இரங்கல் செய்திகளில் வெளிப்பட்ட அன்பான வார்த்தைகள், இந்த விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு மன வலிமையை கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது என பிரதமர் மோடி கூறியுள்ளார்.




## 14 ஆண்டுக்கு முன்பு

ஒடிசாவில் வெள்ளிக்கிழமை (02) இடம்பெற்ற ரயில் விபத்து, 14 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு வெள்ளிக்கிழமை இரவு ஒடிசாவில் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் விபத்துக்குள்ளான சம்பவத்தை நினைவுக்கு கொண்டுவந்துள்ளது.

2009-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ம் திகதி, சென்னை நோக்கி வந்துகொண்டிருந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ், ஒடிசாவில் ஜாஜ்பூர் மாவட்டத்தில், இரவு 7.50 மணியளவில் தடம் புரண்டது. அதிக வேகத்தில் வந்துகொண்டிருந்த அந்த ரயில், வேறு தடத்துக்கு மாறுகையில், விபத்து நடந்தது.

அந்த விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர். தற்போது மீண்டும் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் மிகப் பெரிய விபத்தில் சிக்கி உள்ளது.



## இதயக்கூடும் நொறுங்கிவிட்டது

புகழ்பெற்ற தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் கவிஞருமான வைரமுத்து, ஒடிசா ரயில் விபத்தை அடுத்து எழுதிய கவிதை.

இரும்புப் பெட்டிகளைப் போலவே
இடிபாடுகளுக்குள் சிக்கி
இதயக்கூடும் நொறுங்கிவிட்டது.

பாதிக்கப்பட்ட
ஒவ்வொரு
குடும்பத்திற்கும்
ஆழ்ந்த இரங்கல்.

மீட்புப் பணியாளர்க்குத்
தலைதாழ்ந்த வணக்கம்
இருந்த இடத்தில் எழுந்து நின்று
மௌனமாய் அஞ்சலிக்கிறேன்

கண்ணீர் கன்னம் தாண்டுகிறது




## மணல் சிற்பம்

ரயில் விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக பூரி கடற்கரையில் ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கிடப்பது போன்ற மணல் சிற்பத்தை பிரபல மணல் சிற்ப கலைஞரான சுதர்சன் பட்நாயக் உருவாக்கி உள்ளார். அந்த மணல் சிற்பம் முன்பு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள். ரயில் விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நலம் பெற வேண்டி இந்த மணல் சிற்பத்தை உருவாக்கி உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 05 ஜூன் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.